தனித்தனியாக "ஹோம்" வைத்து நடத்தப்படுகிறது. மொத்தம் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது இப்பொழுது கணக்கெடுக்கவில்லை.

SRI S. M. ANNAMALAI: பிச்சைக்காரர்கள் அதிகமாவதற்குக் காரணமென்ன? அந்தக் காரணத்தைச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர்கள் அதிகம் ஆவதற்கு வறுமை மட்டும் காரணமல்ல என்று சர்க்காருக்குத் தெரியும்.

SRI V. SUBBIAH: இந்தவிதப் பிச்சைக்காரர்களில் நோயுற்றவர்கள், குஷ்ட ரோகம் போன்ற வியாதியுடையவர்கள், அங்கஹீனர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று தனிக் காலனி அமைத்து அவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்க ஏதாவது அரசாங்கத்திற்கு திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர்கள் நிவாரணத்தைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது இந்த வேலையும் அரசாங்கத்தின் பிரத்தியேகமான பரிசீலனையில் இருக்கிறது. நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

Land erosion

*272 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தாளவாடி மலைப் பிரதேசத்திலே மண் அரிப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

(ஆ) அவ்விடத்தில் எத்தனை ஏக்கரா நிலங்கள் மண் அரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன?

(இ) 1960–61-ம் வருடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மூலமாக எத்தனை ஏக்கரா நிலங்களிலே மண் அரிப்புத் திட்டம் அமுலாக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Nil, for the year 1960–61.

(b) Not available.

(c) Nil, Sir.

Water-diviners

*277 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீரூற்றுகளைக் கண்டுபிடித்து விவசாயத்துக்கான கிணறுகளைத் தோண்டுவதற்காக அரசாங்க மூலமாக "நீரூற்றுக் கண்டுபிடிக்கும் நிபுணர்கள்" நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

22nd August 1960]

(ஆ) அப்படியானல் யார் யார் ?

(இ) இவர்கள் இதுவரைக்கும் எத்தனை இடங்களில் நீருற்றுகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir. However, in connection with evolving a scheme for the sinking of open wells in this State for irrigation purposes, the Collector of South Arcot has utilized the services of a water-diviner.

(b) Sri P. S. Kuppuswami of Madras.

(c) Twenty sites in seven villages of Tirukoilur taluk and 20 sites in 15 villages in Vridhachalam taluk have been selected by the water-diviner. It is reported that no wells have been sunk, and that no springs have been discovered.

SRI P. G. MANICKAM: மேற்கொண்டு நீர் ஊற்று இருப்பதைக் கண்டுபிடிப்பது பற்றியும், வல்லுநர்களால் நடைபெறும் சங்கதிகளைப் பற்றியும் பிளாக் டெவலப்மென்ட் கமிட்டிகள் மூலமாக விவசாயிகளுக்குத் தெரிவிப்பது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தண்ணீர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கக்கூடியவர்கள் சில பேர் இருக்கிறார்கள். அவர்கள் இந்த வட்டாரங்களில் நியமிக்கப் பட்டு வருகிறார்கள்.

அதற்கு மேலே, அங்கு வட்டார வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் விவரங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்றால் வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

SRI N. MAHALINGAM: கிழக்கு சமுத்திரக் கரையோரங்களில் "ஸாண்டு ஸ்டோன்" இருக்கும் பிரதேசங்களிலெல்லாம் ஆர்ட்டீஷியன் கிணறுகள் வெட்டித் தண்ணீர் கொண்டுவர முடியும் என்று நிபுணர்கள் கருதுவது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அப்படியானால், அதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆர்ட்டீஷியன் ஊற்றுகள் எங்கெங்கு இருக்கின்றன என்று அவ்வப்போது பரிசீலனை செய்யப்படுகிறது. எங்கெங்கு சாத்தியப்படுகிறதோ அங்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

SRI N. MAHALINGAM: ஆர்ட்டீஷியன் நீர் ஊற்றுகள் திருச்சி ஜில்லாவிலும், தஞ்சை ஜில்லாவில் பட்டுக்கோட்டை தாலுகாவிலும் இருப்பதாக நிபுணர்கள் கருதுவதால் அதைப் பற்றித் தீவிர விசாரணை செய்ய ஒரு குழுவை அரசாங்கம் நியமிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.